# பிரம்மயஜ்ஞம்

**தொகுத்தவர் : எஸ்.ராமகிருஷ்ணன் : +91 88843 34140**

பொதுவாக அனுஷ்டானத்தில், மாத்தியானத்திற்குப் பிறகு பிரம்மயஜஞம் செய்யும் பழக்கம் உள்ளது. மாத்யானத்திற்கும் இதற்கும் தொடர்பில்லை. முன்னரும் செய்யலாம். காலையில் செய்வது என்றால், ஔபாஸத்திற்குப் பிறகு பிரம்மயஜ்ஞம், தேவ பூஜை என்று செய்ய வேண்டும். மத்யானத்தில் செய்தால், மாத்யானிஹம், பிரம்மயஜ்ஞம், தேவபூஜை என்று செய்யலாம். அல்லது மாத்யானிஹம், தேவபூஜை, வைச்வதேவம், பிரம்மயஜ்ஞம் என்று செய்யலாம். பித்ரு தர்ப்பணம் /சிரார்த்தம் நேருகின்ற போது மாத்யானிஹம், தர்ப்பணம்/சிரார்த்தம், பிரம்மயஜ்ஞம், வைச்வதேவம் என்ற வரிசையில் செய்ய வேண்டும்.

பிரம்மஜ்ஞத்தில் இரண்டு தனிப்பட்ட கர்மாக்கள் இருக்கின்றன. இரண்டும் தனித்தனி. முதாலாவது வேதம் ஓதுதலும் அதற்குத் தகுதி பெற விதிகளும்.அது பிரம்மயஜ்ஞம். இரண்டாது தேவ, ரிஷி, பித்ரு தர்ப்பணம். இரண்டிற்கும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லை. சிரார்த்தம், தர்ப்பணம் செய்கின்ற தினங்களில்கூட காலையில் பிரம்யஜ்ஞம் செய்து, சிரார்த்தத்திற்குப் பிறகு தேவ, ரிஷி, பித்ரு தர்ப்பணத்தை வைத்துக் கொள்ளலாம். அவ்வாறு வைத்துக் கொள்பவரும் உண்டு.

அவரவர் குலாசாரப்படி தன் வேதசாகையைத் தினமும் ஓதிக் கொண்டிருக்க வேண்டும். தினமும் ஒரு காண்டம் அல்லது ஒரு பிரச்னம் அல்லது ஒரு அனுவாகம் அல்லது ஒரு ருக்காவது சொல்ல வேண்டும். அல்லது நான்கு வேதங்களின் ஆதி மந்திரங்களையாவது (வேதாதியையாவது) சொல்ல வேண்டும். இது பிரும்மயஜ்ஞம். இது முடியும் வரை காலையுணவு ஏற்கக்கூடாது. இதனை ஆறு, குளக்கரையில் மேற்கூரை இல்லாத இடத்தில் செய்ய வேண்டும். அங்கு வேதத்தை உரக்கச் சொல்லலாம். வீட்டில் செய்வதானால் வேதபாராயணம் பிறர் காதுகளில் படாதபடி சொல்ல வேண்டும். [ஒவ்வொரு வேத சாகையும் முதலில் பல காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு காண்டத்தின் உட்பிரிவும் ப்ரச்னம் அல்லது பிரபாடகம் எனப்பெறும். பிரச்சனத்தின் உட்பிரிவு பஞ்சாசத் (பஞ்சாதி). இன்று வேதாதி மட்டும் சொல்வது பழக்கத்தில் உள்ளது. அக்னி மீளே, இஷேத்வா, அக்நஆயாஹி, சந்நோதேவீ என்று நான்கு வேதங்களின் ஆதியை (வேதாதியை) மட்டும் கூறி செய்கின்றனர்.

வேதம் ஓதக்கூடாத நாட்களில்கூட (பிரதமை, அஷ்டமி, சதுர்தசி, பௌர்ணமி, அமாவாசை, மேகம் மூடிய நாட்கள் போன்ற அனத்யயன நாட்களில்) இதனைச் செய்ய வேண்டும். தேகசுத்தி செய்ய இயலாத போதும், தேசத்தில் கொந்தளிப்பு உள்ள போதும் செய்ய வேண்டியதில்லை. உபநயனமான பிரம்மசாரி, முதல் உபாகர்மா நடைபெறும்வரை வேத அத்யயனம் செய்யத் தகுதி பெறுவதில்லை. அந்நிலையில் காயத்ரியைக் கூறி நிறைவு செய்கின்றனர். ஸூர்யோதயத்திற்கு

முன்பும், இரவிலும் பிரம்மயஜ்ஞும் செய்யக்கூடாது. வேதம் முழுவதும் ஓதியவனாயினும் முறைப்படி அதனைச் சொல்ல இயலாவதன் புருஷஸூக்தம், ஸ்ரீருத்ரம் போன்றவற்றையாவது சொல்லி வரலாம். ஸூர்ய நமஸ்காரத்தை முறைப்படி வேதமந்திரங்களால் செய்பவர்கள் இதனையடுத்து பிரம்மயஜ்ஞும் செய்யலாம்.

தர்பாஸனதத்தில் கிழக்கு நோக்கி அமர்ந்து கொண்டு ஸங்கல்பம் செய்ய வேண்டும். ஸங்கல்பம் செய்வதால் உடலும் உள்ளமும் தூய்மை பெற்றதாய் உணர்ந்து வானிற்கும் தரைக்கும் நடுவே பார்வை பதித்தவனாய் காயத்ரியயை பிரணவம், வ்யாஹ்ருதியுடன் பிரித்திணைத்தும், வரிசையாக உச்சரித்தும், பிறகு ஹரிநாமஸ்வரணமும், ஓங்காரமும் முன்னும் பின்னும் அமைய வேதாதிகளைக் கூற வேண்டும். தனது வேதத்தின் வேதாதியைக் கூறியதும் அத்தியயனம் செய்த வேதத்தின் பகுதியை முடிந்த வரை சொல்லி மற்ற வேதாதி கூறி முடிக்க வேண்டும். முடிவில் பிரம்மா, அக்னி, பூமி முதலானோருக்கு மூன்று தடவை மந்திரத்தால் நமஸ்காரம் செய்ய வேண்டும். இது பிரும்மயஜ்ஞும்.

பொதுவாக பிரம்மயஜ்ஞுப்ரச்னம் சொல்வதாக ஸங்கல்பித்துத் தினம் ஒரு பிரசன்னமாக யஜுர் வேதிகள் 82 நாட்களில் தன்சாகை முழுவதையும் சொல்லிவிடுவர். அதேபோல் மற்ற வேதத்தினரும் செய்வதுண்டு. இதனால் அத்தியயன் செய்த வேதம் மறக்காதிருக்கும். வேதத்தை மறப்பது பெரும் பாவச்செயல். வேதத்தைத் தொடர்ந்து ஓதாமல் இருந்தால் பழையதாகி பலன் தராமல் போகும். பிரும்மயஜ்ஞுப்ரச்னம் சொல்வதால் அக்குறை நீங்குகிறது. வேதத்தில் பல வேள்விமுறைகள் கூறப்பட்டுள்ளன. அந்த வேள்விகளைச் செய்வதால் உண்டாகின்ற பலன் அந்த வேதப் பகுதியை சிரத்தையுடன் ஓதுவதால் கிட்டுகின்றது. அதனால் தேவதைகளின் அருள் தொடர்ந்து கிடைக்கும். பிராமணன் தொடர்ந்து வேதம் ஓத வேண்டும்.

தொடர்ந்து வேதம் ஓதாதவன் பிராமணன் அல்ல. அவனைத் துர்பிராமணம் என்பர். துர்பிராமணத்தன்மை வராதிருக்க முக்கால-ஸந்தியாவந்தனமும், பிரம்மயஜ்ஞுமும் உதவுகின்றன. வேதத்தின் ஒரு பகுதியை-வேத ஸாரமான காயத்ரியைத் தினமும் சொல்லமுடிவதே இவற்றின் முக்கியப் பிரயோஜனம். ராமாயணம், பாகவதம் முதலியவற்றை இவற்றுடன் பாராயணம் செய்வதுண்டு.

தேவ ரிஷி பித்ரு தர்ப்பணம்--நாம் பிறந்ததும் மூவருக்கு நாம் பெரிதும் கடன் பட்டிருக்கிறோம். 1) தேவர்கள்-பிரும்மா முதலானோர். 2) ரிஷிகள்- வேதத்தை தன் தவவலிமையால் கண்டவர்களும்,வேத தேவதைகளும். 3) பித்ருக்கள்-- நம் மூதாதையரான பித்ருக்கள் அதிவ்ய பித்ருக்கள். வஸு, ருத்திரர், ஆதித்யர் என்ற திவ்ய பித்ருக்கள். ஸோமன், யமன், அக்னி போன்ற பித்ருக்களுக்கு உதபுபவர்கள். இந்த மூவரில் தேவர்கள் இயற்கையின் உதவியை அளித்து வாழச்செய்பவர்கள். ரிஷிகள் வேதம் முதலிய அறிவு நூல்களைக் கருணையால் வெளியிட்டு வாழ வழிகாட்டியவர்கள். பித்ருக்கள், ஜீவன் தனக்கென உடலைத் தேடித் திரியும்போது உடல் தந்து வாழ்வில் நுழைத்தவர்கள். இவர்களைத்

திருப்தி செய்வதற்கே தினமும் தர்ப்பணம் செய்ய வேண்டும்.(தர்ப்பணம்=திருப்தி அளிக்கின்ற செயல்). இந்த தர்ப்பணம் சத்யாஷாடம், ஆச்வலாயணம், ஆபஸ்தம்பம், போதாயனம் முதலிய ஸுத்திரங்களில் ஒவ்வொரு வேதm சாகையைச் சேர்ந்தவருக்கும் தனித்தனியே கூறப்பட்டுள்ளது. அவரவர்கள், அவர்களுடைய முறைப்படியே தர்ப்பணம் செய்ய வேண்டும்.

தேவ, ரிஷி, பித்ரு தர்ப்பபணம் -- தேவர்களுக்கு உபவீதியாகவும், ருஷிகளுக்கு உபவீதியாகவும், பித்ருக்களுக்கு பிராசீனாவீதியாகவும் யக்ஞோபவீதத்தைப் போட்டுக் கொண்டு தர்ப்பணம் செய்ய  வேண்டும். தேவர்களுக்கு இருகை நிறைய ஜலம் எடுத்துக் கொண்டு, விரல்களின் நுனியைக் கீழே சாய்த்து ஜலத்தை விட வேண்டும். ரிஷிகளுக்கு வலது கையின் உட்புறம், சுண்டுவிரல் உள்ள பகுதியைத் தாழ்த்தி ஜலத்தை விட வேண்டும். பித்ருக்களுக்கு வலதுகை கட்டை விரலுக்கும், ஆள்காட்டி விரலுக்கும் இடையே உள்ள பகுதியைத் தாழ்த்தி அதன் வழியாக ஜலத்தை விட வேண்டும். நீரைத் தர்ப்பம் பரத்திய தரையில் விட வேண்டும். தாமிரம், பித்தளை, வெண்கலம், வெள்ளி, தங்கம் இவற்றாலான பாத்திரத்தில் தர்ப்பையை பரப்பி அதிலும் செய்யலாம். முடிவில் உபவீதியாக ஆசமனம் செய்ய வேண்டும். (முக்கிய குறிப்பு:- தேவ, ரிஷி, பித்ரு கர்மாக்கள் செய்யாத பொழுது யஞ்ஞோபவீதம் நிவீதமாக (மாலையாக)போட்டுக் கொண்டிருக்க வேண்டும்.)

நிறைவு

*********************************************************************************